மணிமேகலைப் பிரசுரம்

# அகராதிக் கவிதைகள்



வ.மா. குலேந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகராதிக் கவிதைகள்

## வ.மா. குலேந்திரன்


**மணிமேகலைப் பிரசுரம்**

தபால் பெட்டி எண் : 1447

7 (ப.எ.4), தணிகாசலம் சாலை,

தியாகராய நகர், சென்னை - 600 017.

தொ.பே. : 24342926 தொ.ந. : 0091-44-24346082

மின் அஞ்சல் : manimekalai@eth.net

இணைய தளம் : www.tamilvanan.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விவரம்


| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | ➢ | அகராதிக் கவிதைகள் |
| ஆசிரியர் | ➢ | வ. மா. குலேந்திரன் |
| மொழி | ➢ | தமிழ் |
| முதற் பதிப்பு | ➢ | 2005 |
| உரிமை | ➢ | ஆசிரியருக்கு |
| தாளின் தன்மை | ➢ | 11.6 கி.கி. |
| நூலின் அளவு | ➢ | கிரௌன் சைஸ் (12½ x 18½ செ.மீ.) |
| அச்சு எழுத்து அளவு | ➢ | 11 புள்ளி |
| மொத்த பக்கங்கள் | ➢ | xii + 68 = 80 |
| நூலின் விலை | ➢ | ரூ. 25.00 |
| அட்டைப்பட ஓவியம் | ➢ | ஐஸ் கிராஃபிக்ஸ் |
| லேசர் வடிவமைப்பு | ➢ | கிறிஸ்ட் கம்ப்யூட்டர்ஸ் ✆ 23725639 |
| அச்சிட்டோர் | ➢ | ஸ்கிரிப்ட் ஆஃப்செட் சென்னை - 94. |
| நூல் கட்டுமானம் | ➢ | தையல் |
| வெளியிட்டோர் | ➢ | மணிமேகலைப் பிரசுரம் சென்னை - 17. |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

தமிழில் எத்தனையோ வகைக் கவிதைகள். நானும் கவிதை உலகில் புதுமை சேர்க்க விளைந்தேன். குவைத் நாட்டில் தங்கியிருந்த இரண்டு தினங்கள் இளைப்பாற நல்ல சந்தர்ப்பம்.

அப்போது என் மனதில் உதித்தது தான் இங்கே உதிர்ந்துள்ள சில வரிகள்.

இதற்கு ''அகராதிக் கவிதைகள்'' என்று தலைப்புக் கொடுத்துள்ளேன்.

இதனை தமிழ் எழுத்துலகு ஏற்றுக் கொள்ளுமா என்பது எனக்குத் தெரியாது. இதனால் தான் இதனை சிறு நூல் வடிவில் வெளியிட்டுள்ளேன்.

இவை கவிதைகள் அல்ல என்று நீங்கள் சொன்னாலும் எனக்கு பரவாயில்லை ஆனால், அகராதிக் கவிதைகள் இனித் தமிழில் வெளிவர அடி எடுத்து தந்துள்ளேன்.

செம்மொழியாம் தமிழ் மொழிக்கு இவ்வாறான அகராதிக் கவிதைகளும் இனி அணி சேர்க்கும் என திடமாக நம்புகின்றேன்.

வ.மா. குலேந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொல்லத் துடிப்பவன் கவிஞனாகின்றான்
## வெல்வதும் தோற்பதும்
## அவனவன் 'கனதி' தீர்மானிக்கிறது

எப்போதாயினும் சில நாட்கள்
அதுவும் இல்லையெனில் சில கணங்கள்
மற்றவர்களுடன் தன் அந்தரங்கங்களை
பேச விழைகிறான் மனிதன்.
எல்லோருக்குமான 'பொதுவிதி' இது.
தம் கால எல்லைக்குள் சிலர் பேசிவிடுகின்றனர்.
பலர் பேசாமலே வாழ்வை முடித்துவிடுகின்றனர்.
ஆயினும் பேசவேண்டும் என்ற துடிப்பு மட்டும்
எல்லோரையும் சதா அலைத்துக்கொண்டே இருக்கிறது.
நேர் உரையாடல்
சொற்பொழிவு
எழுத்து
அரங்காற்றுகைகள்
வரைதல், வனைதல் என
ஏதோ சொல்லத் துடிக்கின்றனர் எல்லோரும்.
கவிதையின் தோற்றுவாயும், வரவும் இப்படித்தான்.
தனக்கானது மட்டுமே கவிதையெனில்
கவிதை எழுதப்படவேண்டியதே இல்லை.
தான் பேச விழைவனவற்றுடன் பிணைந்து
அதை நெஞ்சுக்குள்ளேயே பதனப்படுத்தி
வேண்டிய பொழுதுகளில் வெளியே எடுத்து
கலந்திளகிக் கரையமுடியுமே.
ஏன்தான் எழுதவேண்டும்?
எழுதவேண்டுமென்ற உணர்வின் எத்தனிப்பே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர் வ.மா. குலேந்திரனின் 'அகராதிக் கவிதைகள்'
இந்த எத்தனிப்பின் வடிவம்தான்.
பக்கத்திருப்பவனைத் தட்டியெழுப்பி
பார்த்தாயா இதையெனக் காட்டத்துடிக்கும்
அந்தரிப்பின் வெளிப்பாடே இது.
கவிஞர் குலேந்திரனுக்குள்ளே
சின்ன வயதிற் பொறியாய் விழுந்த 'எழுத்துத்தவனம்'
இத்தனை காலத்தின்பின்னே எரியத் தொடங்கியது.
முன்னொரு காலத்தில்...
முன்னொரு காலமெனப்படுவது யாதெனில்
முப்பத்தைந்து வருடங்களுக்கு முந்தியெனக் கொள்க.
அது குலேந்திரனின் காலமென இருந்தது
யாழ்ப்பாணத்தில் வெளிவாரிப் பட்டப்படிப்புகள் நிறுவனம்
இவரின் 'சங்கப்பலகையாக' விளங்கிற்று.
பேச்சு
வழக்காடுமன்று
இலக்கிய இதழ்
சின்னச்சின்னப் போராட்டங்கள் என
'அன்றைய குலேந்திரன்' அறியப்பட்டவராகவே இருந்தார்.
புலப்பெயர்வுக்குப் பின்னரே
இவர் 'காணாமற்போனார்' எங்களிடமிருந்து.
காலமிவருக்காகக் காத்திராமல் நகர்ந்தது.
இங்கு அதிசயங்கள் விளையத் தொடங்கின
இப்போ இவரின் 'மீண்டுமொரு சுற்று' மையங் கொள்கிறது.
இந்தக் கால இடைவெளிக்குள்
தனக்குள் எழுப்பிய மாற்றங்களோடும்,
விரிந்து அகன்ற விசாலிப்புகளோடும்
குலேந்திரனின் அடுத்தகட்ட நகர்வு அரங்கேறுகிறது.
மாற்றத்தின் வகைமாதிரியே இந்த அகராதிக் கவிதைகள்.
அகராதிக் கவிதைகள் தமிழுக்குப் புதியனவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை; இது ஏலவே இருக்கிறது எம்மிடம்.
குலேந்திரனின் கவிதைகளே புதிது.
பட்டுத் தெறித்த சிலவற்றில்
என் நெஞ்சில் பொறி விழுத்தின இவை.

**பீரங்கி**

"ஆணையின் ??????
தலையில்லாப் பனைகள்
பீரங்கிகளாய்ப் பயமுறுத்துகின்றன" என்றும்,

**அறிவுறுத்தல்**

"மனைவியிடம் சொல்லுங்கள்
மகள் நடத்தை சரியில்லையென்று
சொன்னது சின்னவீடு" எனவும்,

**வீடு**

"வீட்டினுள்
குளவிக்கூடு
கலைக்க மனமில்லை
அவை கட்டிய வீடு" என்பதாயும்,

**பேச்சுவார்த்தை**

'விரிசலை ஒட்டுவதாய்
இறுதியில்
சண்டையை விஸ்தரித்தல்'
என்றும் சொல்லும்
கவிஞர் வ.மா. குலேந்திரனிடம்
கவிதை 'சிக்கென' அமர்ந்திருக்கிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயினும் போதாமை இன்னுமிருக்கிறது மீதமாய்.
காததூரம் நடக்கக் கிடக்கிறது இவரின் கவிதைப்பாதை
எட்டித் தொடமுடியும் இவரால்.
நட
தொடர்ந்தும் நட
மீள, மீள நட
அடைவாய் சேரிடம்.
கவிஞர் குலேந்திரனும் உச்சியடைவாரெனும்
நம்பிக்கையுடன் வாழ்த்துகள்.
'அகராதிக்கவிதை மரியாதைக்குரியது'.

அன்புடன்
**கவிஞர் புதுவை இரத்தினதுரை**

புத்தூர் கிழக்கு,
புத்தூர்,
10.07.2005

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே...


| | | | |
|---|---|---|---|
| அமெரிக்கா .................. | 1 | சிகரெட் .................. | 8 |
| விபத்து .................. | 1 | தாஜ்மகால் .................. | 8 |
| மது .................. | 2 | காதலன் .................. | 9 |
| சோரம் .................. | 2 | உறவு .................. | 9 |
| போதை .................. | 3 | பேச்சாளன் .................. | 10 |
| மகள் .................. | 3 | எதிரி .................. | 10 |
| அன்னை .................. | 4 | கூட்டம் .................. | 11 |
| ஊடகம் .................. | 4 | பௌத்தம் .................. | 11 |
| சிறை .................. | 5 | பேச்சு வார்த்தை .................. | 12 |
| ஆய்வுரை .................. | 5 | நீதிமன்று .................. | 12 |
| கவிதை .................. | 6 | கௌரவம் .................. | 13 |
| கிரிக்கெட் .................. | 6 | மாமி .................. | 13 |
| மெகா சீரியல் .................. | 7 | காதலி .................. | 14 |
| தேசப்பற்று .................. | 7 | விமானம் .................. | 14 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்தாளன் ................ 15
சினிமா ........................... 15
பாராட்டு ......................... 16
சுதந்திரம் ....................... 16
போராட்டம் .................... 17
ஆட்சி ............................. 17
தொலைபேசி ................ 18
பேனா ............................. 18
துப்பாக்கி ....................... 19
அரேபியர் ....................... 19
தாய்மொழி ...................... 20
தமிழினி ......................... 20
சிறுவிதை ...................... 21
வீடு ................................. 21
அகதி .............................. 22
கடவுச்சீட்டு .................... 22
வீரப்பன் ......................... 23
முதலிரவு ....................... 23
அறிவுரை ....................... 24
தெய்வமொழி ................ 24
பொன்னாடை ............... 25
கெட்டநேரம் ................ 25
பணக்காரர் .................... 26
அம்மா ........................... 26
செல்வந்தன் ................... 27
தமிங்கிலீஷ்/நாகரிகம் 27
செம்மொழி .................... 28
மனிதநேயம் ................. 28
நெல்சன் மண்டேலா .. 29
தண்ணீர் ........................ 29
மனிதர்கள் ..................... 30
வர்ணங்கள் ................... 30
செருப்பு ......................... 31
தலைமை ....................... 31
அப்துல் ஹமீத் ........... 32
செங்கொடிகள் ............ 32

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமதர்மம் ........................ 33
பதவி ........................ 33
இலங்கையில் ........................ 34
ஆப்பிள் ........................ 34
ஒப்பந்தம் ........................ 35
இழப்பு ........................ 35
மொழி ........................ 36
நெடுமாறன் ........................ 36
ரணில் ........................ 37
பிளங்கெற்! ........................ 37
பிரித்தானிய தூதரகம் 38
பிளேயர் ........................ 38
கருணாநிதி ........................ 39
விஞ்ஞானம் ........................ 39
ஜெயம் ........................ 40
கடல் ........................ 40
நண்பன் ........................ 41
Zறே சிந்தி ........................ 41
எம்.ஜி.ஆர் ........................ 43
அண்ணா! ........................ 43
காமராஜர் ........................ 44
சினிமா ........................ 44
மனைவி ........................ 45
நீதிமன்றம் ........................ 45
வெளிநாடு ........................ 46
அரசியல் ........................ 46
தானம் ........................ 47
சாட்சி ........................ 47
சுனாமி ........................ 48
விலை ........................ 48
சட்டத்தரணி ........................ 49
குளிர்சாதனப் பெட்டி . 49
படுக்கையறை ........................ 50
உப்பு ........................ 50
வெண்காயம் ........................ 51
மீன் ........................ 51

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயம் .......................... 52

பேனா! .......................... 52

தந்தை .......................... 53

குடை .......................... 53

ஆதித்தனார் .......................... 54

இறைச்சி .......................... 54

சுவாமி .......................... 55

பாபா .......................... 55

அடிமைப்பெண் .......................... 56

குடிநீர் .......................... 56

கமிலா .......................... 57

வாழை இலை .......................... 57

கடிகாரம் .......................... 58

நாகரிகம்! .......................... 58

வானொலி .......................... 59

படிப்பு .......................... 59

காந்தி .......................... 60

சோதிடம் .......................... 60

கலைஞன் .......................... 61

நாட்காட்டி .......................... 61

பீரங்கி .......................... 62

சேமிப்பு .......................... 62

பினாமி .......................... 63

பழம் .......................... 63

புத்தகம் .......................... 64

காசி ஆனந்தன் .......................... 64

அலுவலகம் .......................... 65

பணம் .......................... 65

இதயம் .......................... 66

தேங்காய் .......................... 66

கடன் .......................... 67

தொலைபேசி .......................... 67

சர்ச்சில் .......................... 68


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அகராதிக் கவிதைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கா

அடுத்த நான்கு ஆண்டுகள்
அதிகாரம்
அழியப் போவது
எத்தனை உயிர்களோ?





# விபத்து

நொண்டியில் நடந்தது
இதனால் தெரிந்தது
நொண்டியின் அருமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மது



அது இல்லாமல்
இருந்தவனில்லை
குவைத்திலோ ஒரு
குவளை கூட இல்லை



## சோரம்

குடும்ப பாரம்
இதனால் போனாள்
சோரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போதை

சாதனையை
அழிக்கும்
பாதை





## மகள்

அள்ளி எடுத்து
அணைத்து வளர்த்தும்
கொள்ளிக்கு உதவாதவள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை



எல்லோராலும்
பாசம் வழங்க
முடியாத கடவுளின்
பிரதிநிதி



# ஊடகம்

உண்மைகளை
மூடி மறைக்கும்
கேடயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறை

அறை குறை
குற்றவாளி
முழுக் குற்றவாளியாகும்
பல்கலைக் கழகம்





# ஆய்வுரை

படைப்பை மேய்ந்தும்
நா எழாமல்
வாழ்த்துதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிதை

ஏதோ
போதையில்
கிறுக்கும் வரிகள்...





## கிரிக்கெட்

அடித்து விட்டு
ஓடுவதை
ஆவென்று பார்க்கும்
விளையாட்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மெகா சீரியல்

பெண்களை
சமையல் கூட்டு
செல்ல விடாத
தடுப்புச் சுவர்





# தேசப்பற்று

புகழ் சேர்க்க
தேச விரோதிகளுக்குப்
பயன் படுவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிகரெட்



ஊதும் போதே
சாம்பலாகி
சாம்பலாவாய் என
எச்சரிப்பது

# தாஜ்மகால்



சின்ன வீட்டிற்கான
அத்திவாரம் தகர்ந்ததால்
எழுந்த மாளிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலன்



தேனைச்
சுவைக்க
வட்டமிடும் வண்டு

# உறவு



இரத்தத்தைத்
தண்ணீராக்கும்
இனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேச்சாளன்



மேடையில் நின்று
உப்புச் சப்பற்று
உரக்க கத்துவோன்

## எதிரி



உன்னை சதா
அவனைப் பற்றியே
சிந்திக்க வைப்பவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூட்டம்



நாட்டமில்லாமல்
கூடும்
வட்டம்

## பௌத்தம்



ஆமையைக்
கொன்றால் தண்டனை
தமிழனைக் கொன்றால்
தர்மம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேச்சு வார்த்தை



விரிசலை ஒட்டுவதாய்
இறுதியில் சண்டையை
விஸ்தரித்தல்

## நீதிமன்று



சட்டத்தை
வளைத்து வட்டமாக்கும்
விளையாட்டரங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கௌரவம்



பாராட்டு வழங்கியவரைத் தவிர்த்தல்



## மாமி

பணம் பெற்று
மருமகளை
பிணமாக்குபவள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காதலி



கடற்கரையில்
கடலை சாப்பிட்டு
காதலனை
சுடலைக்கு அனுப்புபவள்

## விமானம்



தன் வயிற்றில்
மானுடரை அடக்கி
பறக்கும் வாயில்லாப்
பறவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுத்தாளன்

ஏனையோருக்கு
அறிவுரை கூற
மட்டும்
தெரிந்தவன்





## சினிமா

பலரைப்
படுகுழியில்
வீழ்த்துவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டு



சோகக் கதை
அருமை — பாராட்டு
இது — அவனது
சொந்தக் கதை



## சுதந்திரம்

சுதந்திரதினக் கூட்டம்
வீட்டுக்கு வந்து
கைலியைக் கட்டினேன்
கிடைத்தது சுதந்திரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போராட்டம்



சுதந்திரத்துக்கான
போராட்டம் – இறுதியில்
இழந்தது
இருந்த சுதந்திரம்



## ஆட்சி

பருவத்துக்குப் பருவம்
பழம் தேடும்
பட்சிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொலைபேசி



விலை கொடுத்து
வாங்கும்
தொல்லை



## பேனா

உடலுக்குத் தேவை
இரத்தம் என
உணர்த்துவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துப்பாக்கி

மனித குலத்தை
பாக்கி இல்லாது
ஒழிக்க ஒரு
கண்டுபிடிப்பு





## அரேபியர்

காரமான மனிதர்
உணவிலோ இல்லை
காரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்மொழி



தாயின் மொழி அல்ல
தாய் மொழி
சேய் முதல் பேசியதே
சிந்தனைக்கு மொழி



# தமிழினி

மேடையிலே தமிழினி
பற்றி பேசினார்கள்
அது என் மகளென்றேன்!
இல்லை நாம்
பேசியது தமிழ் - இனி?
தலைப்பிலென்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவிதை



கொடுத்தேன்
சிறு முதலீடு
காணாது என்றார்
ஆலமரத்தைக் காட்டினேன்.

## வீடு



வீட்டினுள்
குளவிக் கூடு
கலைக்க மனமில்லை
அது கட்டிய வீடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதி



அகதி என்றாலே
அவமானம்
ஐரோப்பாவில் இதற்காய்
செலவழிப்பதோ
ஏராளம்

# கடவுச்சீட்டு




ஊருக்குப் போனால்
உயிர் இராது!
ஐரோப்பிய பாஸ்போட்
இதனால் கிடைத்தது
அடுத்தநாள் அவன் ஊரில்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீரப்பன்



நரகாசுரன் ஒழிந்தான்
நாட்டில் குதூகலம்
அரசியல் பாதுகாப்பில்
பெரிய நரகாசுரர்கள்



## முதலிரவு

மனங்கள் இணைய
இருமனங்களின்
இணைப்பிற்கு
'திரி' தூண்டும்
ராத்திரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவுரை



மனைவியிடம் சொல்லுங்கள்
மகள் நடத்தை
சரியில்லை என்று
சொன்னது சின்னவீடு



## தெய்வமொழி

தமிழர் தெய்வம்
பசு கன்று
அம்மா என்கிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொன்னாடை



விமான நிலையத்தில்
போர்த்திய போது
உணர்ந்தேன்
அதன் மகிமை

## கெட்டநேரம்



கடிகாரத்தில்
இலண்டன் நேரம்
மாற்றாததால் துபாயில்
விட்டேன் விமானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணக்காரர்



வானிலிருந்து பார்த்தால்
கீழே கொள்ளையழகு
இதனால் தெரியவில்லை
கீழேயுள்ளோர் நிலைமை

# அம்மா



அம்மா செய்வாள்
விதம் விதமாய்
உணவு வகை
ஆங்கில உணவுக்காய்
அங்கு இங்கு அலைவேன்
ஆங்கில நாட்டில்
இன்று
அம்மாவின் உணவும்
இல்லை சுவையும் இல்லை
அம்மா அதையனுப்பு
இதையனுப்பு பார்சலில்
அவை வரும்
ஆனால் அம்மா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வந்தன்



உதவுவதால் நான்
செல்வந்தனாம்!
உள்ளத்தால் செல்வந்தன்
உதவுகிறேன் இதனால்

# தமிங்கிலீஷ்/நாகரிகம்



சினிமாவில்
அங்கும் இங்குமாய்
அரைகுறை ஆடைகள்
அதனால்
ஆங்காங்கே தமிழில்
ஆங்கிலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செம்மொழி



தமிழன் மட்டும்
தமிழனைக் கண்டால்
தமிழில் பேசான்!
செம்மறி மொழியோ?

## மனிதநேயம்



குண்டுகள், துப்பாக்கிகள்
அழிக்க முடியவில்லை
அரபாத்
மரணப் படுக்கையில்
“ஆன்மா
சாந்தியடைவதாக”
“எங்கே புதைப்பது”
உலகத் தலைவர் இருவர்
சொன்னார்கள்.
செத்தது மனிதநேயம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல்சன் மண்டேலா



அன்றொரு நாள்
தீவிரவாதி
இன்று இலண்டனில்
சிலை வைக்க
முண்டியடிப்பும்

# தண்ணீர்



மாநிலங்கள் மட்டும்
மாற்றான் தாய்
பிள்ளைகள் – ஆனால்
தேசியகீதம் ஒன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதர்கள்



குவைத்தில் தினாரில்
சம்பளம் வேண்டும்
குஜராத் நிதியுதவிக்கு
இந்திய ரூபாயில்
அன்பளிப்பு.

# வர்ணங்கள்



கறுப்பு – காவி
சிவப்பு – வெள்ளை
வர்ணங்களுக்காய்
இலக்கியங்கள்
போராட்டங்கள்
செம்மொழி எங்கே?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செருப்பு



சுடுமணலில்
வெறுங்காலுடன்
தெரிந்தது
அருமை



## தலைமை

எல்லோரும் குருடர்கள்
இவனுக்கு மட்டும்
ஒற்றைக்கண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்துல் ஹமீத்



உலகத் தமிழர்
அறிவர் இவரை
இவர் தமிழால்

# செங்கொடிகள்



'மே'யில் மூவினமும் – இலங்கையில்
ஒரே இனம் – கைதட்டல்
யூலையில் தமிழனை – கொன்றனர்
தமிழன் இரத்தத்தில்
வெள்ளைக் கொடி
சிவப்பு? ஆனதுவே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமதர்மம்



சம உரிமை வேண்டும் - என
துப்பாக்கி ஏந்தியோர்
சீரழிந்தனர் சிறிமாவினால் இன்று
'தமிழனை அழி' கோஷம்
வாழட்டும் சமதர்மம்



# பதவி

கணவனைக் கொன்றோர் - என
கதறியழுதவர் - இன்று
"ஜெயவேவா" சொல்கிறார் - ஜே.வி.பிக்கு
கணவனை விட முக்கியம் பதவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையில்



கிறீஸ்துவனுக்கு மொழி இல்லை
முஸ்லீமுக்கு இல்லை மொழி
தமிழன் அறியான் வேறு மொழி
பௌத்தருக்கு மட்டும் – இல்லையாம்
தமிழ் மொழி!

## ஆப்பிள்



பாலியலுக்கு
உந்து சக்தியாய்
ஒரு பழம்
ஆதா ஏவாள்
அவதிக்குக் காரணமாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒப்பந்தம்



ஒப்பாத பந்தங்கள் செய்யப்பட்டது
செல்வா முதல்
பிறபா வரை
இலங்கையில் தான்



# இழப்பு

மனித உயிர் போவது
நியதி தான்
ஆனால்
அன்னை
இழப்பு?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழி



பல் போனால்
சொல் போகும்
புத்தன் பல் இலங்கையில்
இதனால் - இல்லையே
சொல்லில் உண்மை

# நெடுமாறன்

"பனை" இவர் சின்னம்
நீண்டு நெடியவர் இவர்
பனைக்கும் இவருக்கும்
பசளை தேவையில்லை
தமிழர் மரமானார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணில்

சமாதானக் கதவுகள்
திறக்க காரணமானவர்
அணில் ஏறவிட்டு
அண்ணாந்து பார்க்கிறார்

# பிளங்கெற்!

பிறவியிலே வெளிச்சமறியார்
வெளிநாட்டவரை
வெளியேற்றியதில் முரடர்
கெட்டார் - பெண்ணால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரித்தானிய தூதரகம்



பணம் கறந்து
விசா மறுத்து
உலகை - மீண்டும்
கொள்ளையடிக்க முயல்கிறது

## பிளேயர்

எண்ணெய்க்காய் - அமெரிக்கா
எலும்புக்காய் - சென்றார்
விலா எலும்பு முறித்திட்டார்
'மே'யிலே தெரிந்திடுவார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கருணாநிதி

தமிழும் பணம் சேர்க்கும்
அமிழ்தம் என்று
உலகிற்கு அறிவித்த – சிறந்த
கலைஞர் இவர்

# விஞ்ஞானம்



படிப்பறிந்தும் – எழுதாமல்
படிப்பதையும் எழுத்திலுள்ள
துடிப்பினையும் – தடுத்த
தொலைபேசி, தொலைக்காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயம்

"ஜெய" என்றுமே
ஜெயம் என்றோர்க்கு
பாடமானார் - மூன்று
"ஜெயங்கள்" - தமிழகத்தில்



# கடல்

கடலளவு தந்தேன்
கடவுளாய் நின்றேன்
கடக்க உதவினேன்
கடந்தேன் எல்லையென்பதால் - எனைக்
கடக்க எண்ணாதீர்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நண்பன்

உதவிக்கு புரிந்தேன்
என்பதால் எனக்குத்
தந்தான் உபத்திரவம்

## Zஜே சிந்தி

A (எ)ன்னம்மா கோபம் கடலம்மா
B (பீ)ச்சில் நின்றோரை, மற்றோரை
C (சீ)ற்றம் கொண்டு இழுத்துச் சென்றாய்
D (டி)சம்பரிலே என் மக்களைக் கொன்றாய்
E (ஏ)வர் என்ன குற்றம் செய்தார்?
F (எவ்)வேளையிலும் உன் மடியில் இருந்து
G (ஜி)ல்லென்று வீசும் தென்றலை நுகர்ந்து
H (எச்)சில் விழுங்காமல் உன்னழகை ரசித்தோரின்
I (ஐ)ம் புலனை அடக்கி அழித்து விட்டாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

J (ஜ)மாய்த்து விட்டாய் என எண்ணி
K (கே)லி பண்ணாதே ஆழிப் பேரலையே!
L (எல்)லை நீ தாண்டி விட்டதனால்
M (எம்)மனதில் நீ இனி இல்லையடி
N (என்)னென்று இனி உனை நம்புவது
O (ஓ)டித் தொலைந்துவிடு இனியும் வராதே
P (பி)ணந் தின்னிக் கழுகே - குழந்தைகளையும்
Q (கியூ)விலே பிணங்களாய் அடுக்கி விட்டாய்
R (ஆர்)ரோடு நீ விளையாடுகிறாய்?
S (ஸ்)என்று அலைச் சத்தம் கேட்கையிலே - இப்போ
T (டி)க் டிக் என்று மரணபயம் அடிக்கிறதே
U (யூ)ரேசியன் தட்டுக்கள் நகர்ந்ததனால் - நீ
V (வீ)று கொண்டதாய் சொல்லுகிறார் - இதனால்
W (வி)தவைகள் அநாதைகள் பலர் இன்று
X (எக்ஸ்)சாம்பிள் ஏதும் நாம் முன்னறியோம்
Y (வை)த்திருந்த அனைத்தும் அழித்துவிட்டாய்
Z (சற்)றே சிந்தி கண்ணீர் வடிப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்.ஜி.ஆர்

எங்கோ பிறந்து
எங்கோ ஆண்டாலும்
தமிழனாய் வாழ்ந்தவர்





# அண்ணா!

அரசியலைப் புனிதமாக்கிய
புதுயுக - தமிழ்
புத்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காமராஜர்



பழிப்பறியா மனிதர்
ஏழைகட்கு – இலவசமாய்
படிப்பறிவித்தவர்



# சினிமா

தமிழர் மத்தியில்
விரோதங்கள் – வளர
வித்திட்ட சாதனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனைவி

அடுப்படி புகையிலும்
படுக்கையறை பகையிலும்
படாத பாடு படுபவள்





## நீதிமன்றம்

கூறுவதைக் கேட்டு – இறுதியில்
குறிப்பிட்ட தீர்ப்பை
மட்டுமே வழங்குவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு



பணம் உழைக்க வந்து
மனம் உடைந்து போகும்
பாலைவனம்



## அரசியல்

ஊருக்கு உழைக்கப் புறப்பட்டு
குடும்ப நலனில்
ஊறவைக்கும் குட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தானம்

பத்திரிகைகளில் பெயர் வந்தால்
மட்டுமே பலன்
தொடரும்





# சாட்சி

மனச்சாட்சியை
விற்று விடும் – மனிதனின்
நீதிமன்றச் சான்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுனாமி



சுழன்றடித்து
சுழற்றியடித்து – மக்களைக்
காவு கொள்ளும் அலை

## விலை

தோற்றத்தைப் பார்த்து
வேற்று அளவில்
நிர்ணயித்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்டத்தரணி



ஓட்டைகளைப் பயன்படுத்தி
மக்கள் பணம் உறிஞ்சும்
மூட்டைப் பூச்சி



## குளிர்சாதனப் பெட்டி

இறந்த மிருக உயிர்களை
இல்லத்தில் – காக்கும்
பிரேதச் சாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படுக்கையறை



மனைவிக்கு - கணவனிடம்
வேதம் ஓதக் கிடைத்த
சாதகமான ஆலயம்




## உப்பு

கூடினாலும்
குறைந்தாலும்
மனிதனை உறைக்க வைப்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வெண்காயம்

பெரியார் விரும்பியது
இறுதியில் ஒன்றுமேயில்லை
அவர் உணர்த்தியது



## மீன்

உண்ணாதே என்கின்றார் - இன்று
உண்டீர் அன்று - அதனால்
உண்டேன் என்கிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலயம்



முன்னர் சுடலைக்குப் போகோர்
இன்று போகாத இடம்
ஆலயமாம்!



## பேனா!

கத்தியால் குத்தினால்
இரத்தம் வரும் – இது
இரத்தமின்றி சாகடிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தை



மகன் வரும் வரை
காத்திருந்த தந்தை
மனம் இன்று புரிகிறது
மகன் தாமதமான போது!



# குடை

நனையாமல் வந்து
நனைந்த என்னை
உதறி எறிகின்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆதித்தனார்

என்றும் தமிழில்
ஆதிக்கம் செலுத்தும்
தமிழ் அறிஞர்



## இறைச்சி

உயிர் கொடுத்து
உயிர் காக்கும்
உணவுப் பொருள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுவாமி



சுனாமிபோல எழுந்து
பக்தர்களைப் பலிவாங்கிய
சுவாமிகள்



## பாபா

இடை உடைந்தாலும்
சடையின் மகத்துவம்
சாகவில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிமைப்பெண்

ஒருத்திக்கும் ஐவர்
ஒருவனுக்கும் ஐவர்
உருப்படாப் பெண்!





# குடிநீர்

குழாய் நீரைக்
குடியாமல் – அதையே
விலைக்கு வாங்கிக்
குடிப்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கமிலா

காதலுக்குக் கண்
காலம் இல்லை
என்று நிரூபித்த
நவீன நாயகி

## வாழை இலை



சுகாதாரமாய்
உண்ண - இறைவன்
படைத்த தட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடிகாரம்



மனிதனைத் தினம்
கட்டுப்படுத்தும்
சர்வாதிகாரி



# நாகரிகம்!

பலர் சுவைத்த
கரண்டிகளில் மீள
ஹோட்டல்களில் சுவைப்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வானொலி



வானுக்கும் பூமிக்கும்
இடையில் நடப்பதை
வால் சேர்த்து
வானூடு ஒலிப்பது



## படிப்பு

திருமணத்தை நீடிக்க
உதவும் புதியதோர்
கண்டுபிடிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காந்தி



போராடு உடல் அல்ல
உள்ளமே என்று
உணர்த்திய மகான்



# சோதிடம்

கூண்டுக் கிளியிடம்
எதிர்காலம் பற்றி
வினவும் மனிதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைஞன்



தலையை உடைத்து
விலைபோகா
கலையை வளர்ப்பவர்

# நாட்காட்டி



தினம் தினம்
உன் வயதை நினைவுறுத்தும்
இயமன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பீரங்கி

பனையின் தலை
குண்டுகளால் தகர்ந்தது
தலையில்லாப் பனைகள்
பீரங்கிகளாய்ப் பயமுறுத்துகின்றன



## சேமிப்பு

சில மணி நேர
மின்சார சேமிப்பு – விளைவு
இரட்டைக் குழந்தைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பினாமி

சுனாமி வந்ததால்
தமிழகத்தில் அதிகரித்த
சுரண்டல் பினாமிகள்

# பழம்



மனிதர்களில் தான்
பழசுகள் கிழம்கள்
பழத்தில்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தகம்




பலதைப் பார்த்து
எழுதியவன் புத்தகத்தை
படித்து எழுதியவன்
சித்தி

## காசி ஆனந்தன்

காசு இல்லாக் கவிஞன்
மாசு இல்லா மனிதன்
காசிக்குக் கிட்ட இன்று!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலுவலகம்

இரத்த உறவு
தொப்புள் கொடி – உறவு
அதனை மீறிய உறவு

## பணம்



கணமும் விட்டகலா
நண்பர்கள் உன்னை
பிணமாகக் காணும்
பரிசோதனைக் களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதயம்

அடிக்கடி அழித்து
எழுதக் கூடிய
சிவப்புப் பலகை





## தேங்காய்

பழுத்தாலும்
காயாய் இருக்கும்
நிறம் மாறாக் காய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடன்



மனிதனை உயர்த்தித்
தாழ்த்தும்
மகோன்னத சக்தி

## தொலைபேசி



தொல்லையும் தரும்
நல்ல செய்திகளை
தொலைவிலிருந்தும் தரும்
விலை கொடுத்து
வாங்கியது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்ச்சில்

சர்ச்சைகளின் போதும்
சுருட்டின் புகையை
நுகர்ந்து ரசித்தவர்

✵

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்நூலாசிரியரைப் பற்றி...

1966களில் இலங்கையில் இலக்கிய உலகில் காலடி எடுத்து வைத்த வ.மா. குலேந்திரன் இலங்கை இலக்கியப் பேரவை அமைத்து அதன் தலைவராக செயல்பட்டார்.

1974இல் அகில இலங்கை ரீதியாக பரதநாட்டியப் போட்டி ஒன்று இவர் தலைமையில் நடைபெற்றது. இலங்கையில் வழக்காடுமன்றம் என்ற நிகழ்ச்சி இவரால் அறிமுகப்படுத்தப் பட்டதாகும் 'விகடன்' என்ற சஞ்சிகையும் 'செய்தி முரசு' என்ற வாரப் பத்திரிகையையும் இவர் நடத்தினார்.

ஐரோப்பாவில் 'செய்தி முரசு' என்ற வாரப் பத்திரிகையே முதலாவது தமிழ்ப் பத்திரிகையாகும். அத்துடன் ஐரோப்பாவில் முதலாவது மாலைத் தினசரி 'லண்டன் மாலை' இவரால் ஆரம்பிக்கப்பட்டது. சுனாமி பற்றிய முதலாவது ஆவண நூல் 2004 டிசம்பரிலேயே வெளியிடப்பட்டது.

இலங்கை வானொலி இளைஞர் மன்றத்தில் பங்காற்றிய இவர் தற்பொழுது லண்டனில் கானக்குயில் ஒலிபரப்பில் அறிவிப்பாளராகவும் உள்ளார்.

லண்டனில் 'தமிழினி' மாதச் செய்தி இதழும் தமிழினி மஞ்சரி சஞ்சிகையும் பிரபல்யம் வாய்ந்தவையாகும்.

ஈழத்து எழுத்தாளர்களின் 12 நூல்களை இவர் பதிப்பித்துள்ளார். சிறந்த குடியேற்ற சட்டவாதியான இவரால் பலர் லண்டனில் வதிவிடம் பெற்றுள்ளனர்.

- பதிப்பகத்தார்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org